RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22314

# மதுரைக்காஞ்சியில் ஒலிச்சூழலமைவு

**செ. முத்துமாரி [அ, *], இரா. சுதமதி [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி-627008, தமிழ்நாடு, இந்தியா

# Phonology in Maduraikkanchi

**C. Muthumari [a, *], R. Suthamathi [a]**

[a] Research Center of Tamil, Rani Anna Government College for Women, Tirunelveli-627008, Tamil Nadu, India

* Corresponding Author: muthuanuphd@gmail.com

Received: 31-03-2022
Revised: 11-05-2022
Accepted: 13-05-2022
Published: 05-07-2022

Check for updates

**ABSTRACT**

Maduraikkanchi is one of the tenth centuries. This is the longest book in the collection. The lyrics of the book are secular to Pandya king Nedunchezhiyan. The song, which is popularly known as "Peruku Valamaduraikkanchi", is also known as "Koodaramil" and "Kanchipattu". The book describes the beauty and richness of Madurai, the capital of the Pandya nation, and captures the various noises that arise there. In addition to that, when talking about these types of lands, the disturbances that occur in the land are also mentioned with the land environment. This article explores such subtleties.

**Keywords:** Arp, Musical, Inkural, Odai, Saturation, Conflict, Novel.

## முன்னுரை

பத்துப்பாட்டு நூற்களில் ஒன்று மதுரைக்காஞ்சி. இத்தொகுப்பில் உள்ள நூல்களுள் மிகவும் நீளமானது இதுவே. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கு உலகியல் உணர்த்துவதாய் இந்நூலின் பாடல்வரிகள் அமைந்துள்ளன. “பெருகு வளமதுரைக்காஞ்சி” எனச் சிறப்பிக்கப்படும் இப்பாட்டு “கூடற்றமிழ்” என்றும், “காஞ்சிப்பாட்டு” என்றும் சிறப்புப் பெயர்களைப் பெறும். பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரையின் அழகையும், வளத்தையும் கூறுகின்ற இந்நூல் அங்கு எழும் பல்வேறு ஓசைகளையும் எடுத்தியம்புகிறது. அதுமட்டுமல்லாமல் ஐவகை நிலங்களைப் பற்றிக் கூறும்போது அந்நிலத்தில் உண்டாகும் ஆரவாரத்தை அந்நிலச் சூழலமைவோடும் கூறியுள்ளது. இத்தகைய நுட்பமானத் திறத்தினை இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

## குறிஞ்சி நில ஒலிச்சூழலமைவு

மதுரைக்காஞ்சியில் குறிஞ்சிநிலத்திற்குரிய ஒலிச்சூழலமைவாகத் தினை விளைநிலத்தில் கிளியை ஓட்டும் ஆரவாரமும், பல நிறமுடைய மணிகளைப் போன்ற பூக்களைக் கொண்ட அவரையின், நிறம் பொருந்திய தளிர்களைத் தின்னும் காட்டுப்பசுக்களை ஓட்டும் கானவர் ஆரவாரமும், மலைமிசை வாழும் குறவன் தோண்டி மூடிய வாயையுடைய பொய்க்குழியில் விழுகின்ற பக்குவத்தையுடைய ஆண்பன்றியைக் கொன்றதனால் உண்டாகும் ஆரவாரமும், வேங்கை மரத்தில் பூப்பறிக்க வரும் மகளிர் ‘புலி, புலி’ என்று கூவியதனால் ஏற்பட்ட ஆரவாரமும், கரிய நிறத்தையுடைய பன்றியைக் கொல்லுகின்ற புலியின் பூசலால் ஏற்பட்ட பேரொலியும் ஆகிய எல்லா

ஒலிகளும், விளங்குகின்ற வெள்ளிய அருவி வீழ்வதால் எழும் ஒலியோடு நீர் பெருகி ஓடும் பல கால்களைக் கொண்ட பக்க மலைகளைச் சூழ்ந்து மாறி மாறி ஒலிப்பதை,

"தினைவிளை சாரற் கிளிகடி பூசல்

மணிப்பூ அவரைக் குரூஉத் தளிர் மேயும்

ஆமா கடியும் கானவர் பூசல்

சேணோள் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்

வீழ் முகக் கேழல் அட்ட பூசல்

கருங்கால் வேங்கை இருஞ்சினைப் பொங்கர்

நறும்பூக் கொய்யும் பூசல், இருங்கேழ்

ஏறு அடு வயப்புலிப் பூசலொடு, அனைத்தும்

இலங்கு வெள் அருவியொடு சிலம்பகத்து இரட்ட"

என்னும் பாடல்வரிகள் விளங்குகின்றன (Gunaseelan, 2003). கிளி கடியும் பூசல், கானவர் ஆமா கடியும் பூசல், கேழல் அட்ட பூசல், பூக்கொய்யும் கானவர் பூசல், வயப்புலி பூசல் ஆகிய ஒலிகள் அருவிகள் ஒலிக்கும் பக்க மலைகளில் பட்டு எதிரொலிப்பதை குறிஞ்சி நில ஒலிச்சூழலமைவாக மாங்குடி மருதனார் எடுத்தியம்பியத் திறம் அவர்தம் செவிப்புல உணர்விற்குச் சிறந்த சான்றாக அமைவதோடு, பாடலை வாசிப்போரின் மன உணர்வையும் அத்தகைய சூழல் உணர்வுக்கு ஆட்படுத்துவது வியப்பிற்குரியது.

## மருதநில ஒலிச்சூழலமைவு

மருதநிலத்தில், மீன் பிடிப்பவர்கள் மருதநிலத்து மீனைக் கொன்று குவித்தலால் ஏற்பட்ட ஓசையும், கரும்பின் சாறு பிழிவதற்காக அமைக்கப்பட்ட ஆலையிடத்துத் தோன்றும் ஓசையும், களை பறிக்கும் இடத்தில் தோன்றும் ஓசையும், முதுமையினால் சேற்றில் விழுந்த எருதினைக் கள்ளையுண்ணும் களமர் தூக்கிக் கரை சேர்க்கும்போது நிகழும் ஆரவாரமும், நெல் முற்றிய வயல்களில், அந்நெல்லை அறுப்பவர்கள் தம் கைகளால் அடிக்கும் பறை ஓசையும், திருப்பரங்குன்றத்தில் திருவிழாக் கொண்டாடும் ஆரவாரமும், மகளிர் தம் கணவரோடு நீராடும் ஆரவாரமும், பாணர் குடியிருப்பில் பாடலாலும், ஆடலாலும் எழுந்த ஓசையும், ஆகிய இவ்வனைத்து ஓசைகளும், ஆகாயத்தில் சென்று முழங்கி, அப்பகுதியில் வாழ்பவர்க்கு இனிமை தரும்படி ஒலிப்பதை,

"கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்

வேழப் பழனத்து நூழிலாட்டு

கரும்பின் எந்திரம், கட்பின், ஓதை

அள்ளல் தங்கிய பகடுஉறு விழுமம்

கள் ஆர் களமர் பெயர்க்கும் ஆர்ப்பே

ஒலிந்த பகன்றை விளைந்த கழனி

வன்கை வினைஞர் அரிபறை, இன்குரல்

தளிமழை பொழியும் தண் பரங்குன்றில்

கலி கொள் சும்மை, ஒலிகொள் ஆயம்

தழைந்த கோதை தாரொடு பொலியப்

புணர்ந்து உடன் ஆடும் இசையே; அனைத்தும்

அகல் இரு வானத்து இமிழ்ந்து இனிது இசைப்ப”

என்னும் பாடல்வரிகள் உணர்த்துகின்றன (Gunaseelan, 2007). செல்வவளம் கொழியும் மருத நிலத்தின் பல்வேறு ஓசைகள் எழுவதின் மூலம் ஒலிச்சூழலமைவை மதுரைக்காஞ்சி அழகுற எடுத்தியம்பியுள்ளது. மருத நில மக்களுக்கு இவ்வொலிகள் இனிமை தருபவையாக இருப்பதை இப்பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன.

## மருதமும் நெய்தலும் - ஒலிச்சூழலமைவு

வயல்கள் தழைக்கும் வண்ணம், குளத்திலிருந்து நீரை இடா என்னும் கூடைகளால் முகந்து கொள்ளும் தொழில் செய்வார் எழுப்பும் ஓசையும், ஏற்றத்துடன், மேலும் கீழும் இயங்குகின்ற, அகன்ற நீர் இறைக்கும் பன்றிப்பத்தரின் ஓசையும், மென்மையாகத் தொகுக்கப்பட்டுள்ள வலிமை வாய்ந்த பூட்டைப் பொறியின் ஓசையும், நெல் அரிகளின் மீது கடா விடுகின்றவர்கள் எழுப்பும் ஓசையும், எருதுகள் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணியின் ஓசையும், பயிர்களைத் தின்னவரும் பெரிய கிளி முதலிய பறவைகளை ஓட்டும் ஓசையும் என மருத நிலத்து எழும் ஓசைகளுடன் கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவருடைய மகளிர் ஏந்நாளும் ஆடும் குரவைக் கூத்தின் ஓசையும் சேர்ந்து பேரொலியாக எங்கும் ஒலிப்பதை,

“நீர்த் தெவ்வும் நீரைத் தொழுவர்

பாடு சிலம்பு இசை ஏற்றத்

தோடு வழங்கும் அகல் ஆம்பியின்

கயன் அகைய வயல் நிறைக்கும்

மென் தொடை வன் கிழாஅர்

அதரி கொள்பவர் பகடு பூண் தெளமணி

இரும்புள் ஒப்பும் இசையே என்றும்

மணிப்பூ முண்டகத்து மணல்மலி கானல்

பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப”

என்னும் பாடல் வரிகள் அழகுற கூறுகின்றன (Gunaseelan, 2003). இதில் மருதம், நெய்தல் ஆகிய இரு பகுதிகளிலும் எழும் பல்வேறு ஓசைகள் சுட்டப்பட்டுள்ளன. இவ்வொலிகளும், ஒலிச்சூழலும் பழந்தமிழ் மக்கள் இயற்கையோடு கூடிய இனிய வாழ்வை வாழ்ந்தனர் என்னும் செய்தியை எடுத்துரைக்கின்றன.

## மதுரை நகருக்குரிய ஒலிச்சூழலமைவு

முற்றிலும் நகர்மயமாகவும் பொறிமயமாகவும் அமைந்துவிட்ட இக்கால வாழ்க்கை முறையில் வைகறைத் துயிலெழுந்தது முதல் இரவு கண்ணயரச் செல்லும் வரை பல்வேறு ஒலிகளை நாம் விரும்பாவிடினும் செவிமடுத்தே ஆகவேண்டும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இதே நிலைதான் இருந்ததாக மதுரைக்காஞ்சி உரைக்கிறது.

## விடியற்காலத்தில் மதுரை மாநகர்

விடியற்காலத்தில் மதுரை மாநகரில் எழும்; பல்வேறு ஓசைகளை மதுரைக்காஞ்சி அழகுற எடுத்துக்காட்டுகிறது.

தேனுண்ணும் தும்பிகள் பாடினாற்போல, வேதத்தை ஓதும் அந்தணர்கள், வேதங்களில் தெய்வங்களைத் துதிப்பனவாக அமைந்துள்ள பகுதிகளைப்பாடும் ஓசையும், யாழிசைக்க வல்லார் நரம்புகளைத் தெறித்து மருதப்பண்ணைப் பாடும் ஓசையும், யானைகளைப் பாதுகாக்கும் பரிக்கோல்காரர், கடிய களிற்றினுக்குக் கவளத்தினை உண்பிக்கும் ஓசையும், கள்ளை விற்பவர், களிப்பினைத் தரும் கள்ளினுக்கு விலை கூறி விற்கும் ஓசையும், கற்புடைய மகளிர் தங்கள் கணவருடன் துயில்கொண்டு விடியற்காலை எழுந்ததும் இல்லறக் கடமைகளை செய்ய முற்படும்போது அவர்தம் சிலம்பு முதலிய அணிகலன்கள் ஒலிக்கும் ஓசையும், திண்ணிய சுவர்களையுடைய நல்ல அகங்களின் கதவுகள் ஒலிக்கும் ஓசையும், கள்ளுண்டு தோன்றிய களிப்பினை வெளிப்படுத்தாது, தம்மிடத்தே தடுத்துக்கொண்ட மழலை மொழிகளைக் கூறும் நாவினையுடைய பழைய களிப்பினையுடையாரின் முழங்கும் குரலும், வைதாளிகர் தத்தம் துறைக்கு உரியனவற்றை இசைக்கும் ஓசையும், பள்ளி எழுச்சிக்காக முரசு ஒலிக்கும் ஒலியும், ஏறுகள் தம்முள் மாறுபட்டு முழங்கும் ஒலியும், கோழிச்சேவல் விடியற்காலம் அறிந்து கூவும் ஓசையும், குருகின் சேவல்களோடு அன்னத்தின் சேவல்களும் தம்தம் பெண்ணினத்தை அழைக்கும் ஓசையும், பிடியொடு கூடிய பெரிய களிறுகள் முழங்கும் ஓசையும், கரடி முதலிய வலிய விலங்குகளும், புலியும் முழங்கும் ஓசையும், வண்டுகளும், மிஞிறுகளும் ஆர்ப்பரிக்கும் ஓசையும் ஆகிய இவ்வனைத்து ஓசைகளும் மதுரை நகரின் விடியற்காலம் ஒலிக்கும் ஒலிகளாக மாங்குடி மருதனார் அழகுற எடுத்துரைக்கிறார்.

"போது பிணி விட்ட கமழ் நறும் பொய்கைத்
தாது உண் தும்பி போது முரன்றாங்கு
ஓதல் அந்தணர் வேதம் பாட
சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி
யாழோர் மருதம் பண்ண, காழோர்
கடுங்களிறு கவளம் கைப்ப, நெடுந்தேர்ப்
பணைநிலைப் புரவி புல் உணாத் தெவிட்ட
பல்வேறு பண்ணியக் கடை மெழுக்கு உறுப்ப,
கள்ளோர் களி நொடை நுவல, இல்லோர்
நயந்த காதலர் கவவுப் பிணித் துஞ்சி
புலர்ந்து விரி விடியல் எய்த, விரும்பி
கண் பொரா எறிக்கும் மின்னுக்கொடி புரைய
பரூஉக் காழ் ஆரம் சொரிந்த முத்தமொடு
பொன் சுடு நெருப்பின் நிலம் உக்கென்ன
அம்மென் கரும்பைக் காய் படுபு, பிறவும்
தருமணல் முற்றத்து அரி ஞிமிறு ஆர்ப்ப
மென் பூஞ் செம்மலொடு நன்கலம் சீப்ப,
இரவுத் தலைப் பெயரும் ஏம வைகறை

என்னும் பாடல்வரிகள் வழி மதுரை நகரின் விடியற்காலச் சூழலமைவைப் புலவர் பதிவு செய்துள்ளத் திறத்தை அறிய முடிகிறது (Gunaseelan, 2003).

## நாளங்காடி, அல்லங்காடியில் எழும் ஓசைகள்

அந்தியில் நடைபெற்ற அங்காடியை "அல்லங்காடி" என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை "நாளங்காடி" என்றும் அக்காலத்தில் அழைத்தனர். (அங்காடி - கடைத்தெரு) நாளங்காடியில் பொருள்களை வாங்கிச் செல்ல வந்த பல்வேறு மொழிகளைப் பேசும் மாந்தர்தம் கூட்டத்தின் ஆரவாரமும், கடலின் ஒலிபோல முழங்கும் ஓசையையுடைய முரசை அறைந்து, விழா நிகழ்வினை நாட்டில் உள்ளவர்களுக்குச் சொல்வதால் விழாவிற்குத் திரண்டவர்களின் ஆரவார ஒலியும், குளத்தைக் கையால் குடைந்தால் ஏற்படும் ஒலிகளைப் போல் ஒலியெழுப்பும் இசைக்கருவிகளை முழக்கியும், இவற்றைக் கேட்டுக் களித்து ஆடுவாருடைய ஆரவாரமும் உடையதாகத் தெருக்கள் காணப்படுவதை,

"யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசை எழுந்து ஒலிப்ப
மா கால் எடுத்த முந்நீர்; போல
முழங்கு இசை நன்பணை அறைவனர் நுவல
கயம் குடைந்தன்ன இயம் தொட்டு, இமிழ் இசை
மகிழ்ந்தோர் ஆடும் கலி கொள் சும்மை
ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து"

என்னும் பாடல்வரிகள் உணர்த்துகின்றன (Gunaseelan, 2003). மதுரை நகரில் அமைந்த நாளங்காடி, அல்லங்காடி என்ற இருபெரும் கடைத் தெருக்களிலும் எழும் பல்வேறு ஒலிகளை இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது.

இவ்வொலிகளைத் தவிர, தீவினையைக் கழுவுதற்குக் காரணமான, தீர்த்த நீரைத் தன்னிடத்தே கொண்ட, வேறோர் இடத்தில் இல்லாத நெருங்கும் திருநாளை உடைய ஏழாம் நாள் அந்தியில், விழாவைக் காணத் திரண்டு வரும் நாட்டிலுள்ளார் ஆர்த்த ஆரவாரம் போலப் பெரிய நான் மாடத்தால் மலிந்த புகழொடு விளங்கும் நகரின் அகன்ற இடத்தையுடைய, நாட் காலத்துக் கடையில் எழும் ஆரவார ஓசையும், சேரனின் நாள் ஓலக்கத்தில் அனைத்துக் கலைகளையுமுணர்ந்தோர் கூடித் தருக்கஞ் செய்யுங்கால் ஏற்படும் ஆரவாரம் போல மதுரை நகரில் நால்வேறு தெருவிலும் கல் என்று எழும் ஓசையும், கலங்களில் வந்து இறங்கும் பண்டங்களை இறக்குமதி செய்யும் பட்டினத்தில் ஒல்லென எழும் ஓசையைப் போல, பண்டங்களை மரக்கலங்களில் ஏற்றும்போது அல்லங்காடியில் எழும் பேராரவாரமும், பறவைகள் மாலைநேரம் வந்ததும் இருப்பிடத்திற்குத் திரும்பும்போது தம் இனத்தைச் சேர்ந்த மற்ற பறவைகள் ஒன்று திரள்வதற்காக ஒலி எழுப்புவது போல அல்லங்காடியில் எழும் ஆரவாரமும், போன்ற அழகிய உவமை நயங்களுடன் மாங்குடி மருதனார் எடுத்தியம்பியத் திறம் போற்றத்தக்கது (Gunaseelan, 2003).

## முடிவுரை

மதுரைக்காஞ்சியில் குறிஞ்சி நில ஒலிச்சூழலமைவும், மருதநில ஒலிச்சூழலமைவும், மருதம், நெய்தல் நில ஒலிச்சூழலமைவும், மதுரை நகருக்கேயுரிய ஒலிச்சூழலமைவும் விளக்கப்பட்டிருப்பதனை மனித நாகரிகத்தின் மற்றொரு வளர்ச்சிநிலை எனலாம். பெருமகிழ்ச்சியும் பேராரவாரமும் தமிழகத்தின் எந்தப்பகுதியில் எந்தச் சூழலில் நிலவும் என்பதனை மாங்குடி மருதனார் அறிந்து தம் பாடலில் பதிந்து வைத்துள்ளமை அவரது விரிந்து பரந்த அறிவையும் சங்கப் புலவர்கள் தத்தம் நாட்டு எல்லைக்குள் முடக்கிவிடாமல் தமிழ்கூறுநல்லுலகம் தழுவிய பார்வையைப் பெற்றிருந்தனர் என்பதையும் தெளிவாக்குகின்றன.

## References

Gunaseelan, R., (2003) Phonological Studies in Sangam Literature, Research Studies, Chennai, India.

Gunaseelan, R., (2007) Palanthamil Olachulal, Indian University Tamil Editors, Forum International Seminar Paper, Chennai, India.

Phantom Targeter, (2005) Occultism in Sangam Literature, World Tamil Classical Conference Article, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License